# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2013 - 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 9

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழின் செம்மை கருதி அதற்கு வைக்கப்பட்ட பெயர்

அ) தீந்தமிழ் ஆ) பைந்தமிழ்
இ) செந்தமிழ் ஈ) தேன்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. ஆட்டத்து மங்கையர் போல் மொய்த்து நின்ற பயிர்

அ) மா ஆ) குரக்கன்
இ) நெல் ஈ) சோளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. முள் + செடி என்பதைச் சேர்த்தால்

அ) முள்செடி ஆ) முச்செடி
இ) முற்செடி ஈ) முட்செடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. கடற்றொழிலாளர் என்பவர்

அ) மீனவர் ஆ) உழவர்
இ) இடையர் ஈ) வேடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. காட்டில் யானைகள் கூட்டங் கூட்டமாகச் செல்லும். இச் சொல்லியத்தில் கூட்டங் கூட்டமாக என்பது

அ) அடுக்கிடுக்குத் தொடர் ஆ) இரட்டைக்கிளவி
இ) அடுக்குத் தொடர் ஈ) இணைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. தரப்பட்டுள்ள சொற்களில் பகாச்சொல்

அ) தமிழர் ஆ) கலைஞர் இ) பொன்னன் ஈ) மண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. விசயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே அங்கு வாழ்ந்தவர்கள்

அ) சிங்களவர் பறங்கியர் ஆ) இயக்கர் நாகர்

இ) பறங்கியர் ஆங்கிலேயர் ஈ) ஆங்கிலேயர் சிங்களவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. 'கோவேத' என்ற தமிழ்ப் பிராமி எழுத்தில் 'கோ' என்ற சொல் குறிப்பது

அ) மன்னனை ஆ) மக்களை

இ) கடவுளை ஈ) புலவரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. இன்றைய உலகிற்குச் சூழல் பாதுகாப்பு சாலப் பொருந்தும்.
இச்சொல்லியத்தில் வந்துள்ள உரிச் சொல்

அ) பொருந்தும் ஆ) சால

இ) உலகிற்கு ஈ) சூழல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. பின்வருவனவற்றுள் எதிர்கால இடைநிலைகள்

அ) த், ற் ஆ) கிறு, கின்று

இ) ப், வ் ஈ) கிறு, ற்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. கடலலை என்பது

அ) திரிதற்புணர்ச்சி ஆ) கெடுதற்புணர்ச்சி

இ) தோன்றற் புணர்ச்சி ஈ) இயல்புப்புணர்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. 'தமிழ்மறை விருந்து' என்ற நூலை எழுதியவர்

அ) மறைமலை அடிகள் ஆ) தேவநேயப் பாவாணர்

இ) தனிநாயகம் அடிகள் ஈ) இளங்கோ அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. களிறு என்பது

அ) ஆண் புலி ஆ) ஆண் யானை

இ) ஆண் கரடி ஈ) ஆண் சிங்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. 'கொன்றைவேந்தன்' என்ற நூலை எழுதியவர்

அ) ஔவையார் ஆ) திருவள்ளுவர்

இ) பாவேந்தர் ஈ) கபிலர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. மகாவம்சம் எழுதப்பட்ட மொழி

அ) சிங்களம் ஆ) எலு

இ) பாளி ஈ) தெலுங்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. இங்கு வந்துள்ள இரட்டைக்கிளவி

அ) கன்னங்கரிய ஆ) மளமள

இ) மெல்ல மெல்ல ஈ) மேலும் கீழும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. உலகில் முதல் மாந்தன் தோன்றிய இடம்

அ) அவுத்திரேலியாக் கண்டம் ஆ) ஆசியாக் கண்டம்

இ) குமரிக்கண்டம் ஈ) ஐரோப்பாக் கண்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. 'து' என்ற எழுத்து

அ) உயிரெழுத்து ஆ) உயிர்மெய்யெழுத்து

இ) மெய்யெழுத்து ஈ) மெல்லெழுத்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. தனிநாயகம் அடிகள் திருக்குறளை மொழிபெயர்த்த மொழிகள்

அ) சீனம், மலாயம் ஆ) உருது, மலாயம்

இ) கிரேக்கம், சீனம் ஈ) தெலுங்கு, சீனம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற பாடத்தில் குறிப்பிடப்படும் தொழில்

அ) கடற்றொழில் ஆ) உழவுத்தொழில்

இ) சுரங்கத் தொழில் ஈ) மீன்பிடித் தொழில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. இலங்கையைத் தலைநகராகக் கொண்டு தமிழகம் முழுவதையும் ஆண்ட மன்னன்

அ) எல்லாளன் ஆ) இராசேந்திர சோழன்

இ) இராவணன் ஈ) குலோத்துங்க சோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. பின்வருவனவற்றுள் அடுக்கிடுக்குத் தொடர்

அ) பெரியபெரிய ஆ) இரவும் பகலும்

இ) நறநற ஈ) செக்கச்சிவந்த

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. உண்டான் என்ற சொல்லின் பகுதி

அ) உண் ஆ) உண்ட

இ) உண்டு ஈ) உண்ண

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. திருகோணமலையில் கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்ட இடம்

அ) மாறனாவில ஆ) சேருவில

இ) பொல்காவல ஈ) யாஎல

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. 'கோலுக்கே இந்தப் பயம் கொள்கிற பிள்ளாய்' இதில் கோல் என்பது

அ) தடி ஆ) ஈட்டி இ) வேல் ஈ) அம்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. கலைஅரசி கலைவிழாவில் நன்றாகப் பாட்டுப் பாடினாள். இச் சொல்லியத்தில் நன்றாக என்பது

அ) பயனிலை ஆ) எழுவாய்
இ) செயப்படுபொருள் ஈ) அடைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பொம்பரிப்பு என்னும் இடம் அமைந்துள்ள மாவட்டம்

அ) கொழும்பு ஆ) புத்தளம்
இ) யாழ்ப்பாணம் ஈ) வவுனியா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. இலக்கணவகையால் தமிழ்மொழியில் உள்ள சொற்கள்

அ) 4 ஆ) 3 இ) 2 ஈ) 6

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. நாகதீபம் பற்றிக் குறிப்பிடும் பழந்தமிழ் நூல்

அ) வளையாபதி ஆ) மணிமேகலை
இ) சிலப்பதிகாரம் ஈ) குண்டலகேசி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. 'கார்மேகம் அன்ன கூந்தல்' இதில் வந்துள்ள உவமேயம்

அ) கருமை ஆ) கார்மேகம்
இ) கூந்தல் ஈ) அன்ன

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

மலையும் சோலையும் சூழ்ந்த ஓர் அழகிய சிற்றூர். அந்த ஊரில் பசுமையான வயல்கள் நிறைந்திருந்தன. உழவர்கள் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தனர். அதனால் அவர்களின் வளமனைகள் உணவுப்பொருட்களினால் நிறைந்திருந்தன. பசி, பட்டினி என்றால் என்ன என்பதை அறியாத ஊர் மகிழ்ச்சியில் திளைத்திருந்தது. ஒருமுறை கடுமையான வரட்சி ஏற்பட்டது. உழவர்கள் பயிர் செய்யமுடியாது துன்பப்பட்டனர். வறுமை அவ்வூரை வாட்டியது. ஒரு நாள் மாலைப் பொழுது கதிரவன் மேற்குத் திசையில் மறையத் தொடங்கினான். பறவைகள் ஒலி எழுப்பிக் கொண்டு தத்தம் கூடுகளுக்குத் திரும்பின. ஆடுகளும் மாடுகளும் வீடுகளுக்குத் திரும்பின. வானத்தில் கருமேகங்கள் திரண்டன. மழை பெய்வதற்கான அறிகுறியாகக் குளிர்காற்று வீசியது. ஊரெங்கும் மண் மணம் வீசியது. சிறிது நேரத்தில் பெருத்த மழை பெய்யத் தொடங்கியது. அதனால் தெருக்களில் மழை நீர் பெருக்கெடுத்து வெள்ளமாக ஓடியது. பிள்ளைகள் கப்பல் செய்து வெள்ளத்தில் மிதக்க விட்டு விளையாடினர். ஏரிகளும், குளங்களும் நிரம்பின. பெய்த மழையில் பயிர்கள் செழித்து வளரும்; விளைச்சல் பெருகும் என மக்கள் மகிழ்ந்தனர்.

1. உழவர்கள் ஏன் துன்பப்பட்டனர்?

   ________________________________________

   ________________________________________

2. மழை பெய்தபின் எவை நிரம்பின?

   ________________________________________

   ________________________________________

3. உழவரின் வளமனைகள் எவற்றால் நிறைந்திருந்தன?

   ________________________________________

   ________________________________________

4. மழை பெய்வதற்கு முன் தோன்றிய அறிகுறிகள் எவை?

5. ஏன் மக்கள் மகிழ்ந்தனர்?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழில் ஐந்திற்கு விடை தருக.**

1. இலங்கை அரசின் சிங்களம் மட்டும் என்ற அரச மொழிச் சட்டத்தை எதிர்த்து அமைதிப் போராட்டங்களில் ஈடுபட்ட தமிழ் ஆய்வாளர் யார்?

2. மகாவம்சம் என்ற நூல் எழுதப்பட்ட நோக்கங்களில் ஒன்றைத் தருக?

3. போராட்டக்களம் சென்ற வீரமகன் பற்றிய எத்தகைய செய்திகள் தாய்க்குக் கிடைத்தன?

4. இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழர் என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள் இரண்டைத் தருக.

5. நாட்டிய மங்கையர் போல் தலைசாய்த்து ஆடிக் கொண்டிருந்த நெற்பயிர் எதனால் பாழாகிப்போனது?

______________________________

______________________________

6. பெருங்கற்கால மக்களின் பொருண்மியச் செயற்பாடுகள் இரண்டு தருக.

______________________________

7. மகாவம்சம் ஒரு கட்டுக்கதை என்பதை விளக்கும் சான்றுகள் இரண்டு தருக.

______________________________

______________________________

______________________________

புள்ளிகள் 10

**4) பொருத்தமான சொற்களை எழுதி கவிதையை ஆக்குவோம்.**

## கல்லறை மேனியர்

| | | | | |
|---|---|---|---|---|
| கழுத்தில் | என்றும் | உறங்குகின்ற | மறவோமே | ஒரு |

கல்லறையில் ______________ தெய்வங்களே நீங்கள்

கணப்பொழுதும் உங்களை ______________ நாங்கள்

நஞ்சினைக் ______________ சுமந்தீர்களே - எங்கள்

நெஞ்சங்களில் ______________ நிறைந்தீர்களே !

உங்களின் கனவுகள் நிறைவேறும் ______________ நாள்

உண்மையில் அதுதான் எங்களின் திருநாள்.

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. தரப்பட்டுள்ள மரபுத்தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் தருக.

கிடு கிடு ______________________________

தன்னந்தனியே ______________________________

2. 'எடுத்தான்' இச் சொல்லை பகுத்து எழுதுக.

______________________________

______________________________

3. பின்வரும் புணர்ச்சி வகைகளுக்கு எடுத்துக்காட்டுகள் தருக?

தோன்றல் ____________________

திரிதல் ____________________

கெடுதல் ____________________

4. சிறுவர் அவையோரை மகிழ்வித்தனர். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள பெயர்ச்சொல், இடைச்சொல், வினைச் சொல் என்பவற்றைத் தருக.

பெயர்ச் சொல் ____________________

இடைச் சொல் ____________________

வினைச் சொல் ____________________

5. எழுவாய் அடைமொழி, செயப்படுபொருள் அடைமொழி, பயனிலை அடைமொழி என்பன இடம்பெறுமாறு சொல்லியம் ஒன்று எழுதுக.

______________________________

______________________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

திருவள்ளுவர் ஒரு தமிழ்ப் புலவர். இவர் தமிழ் நாட்டில் வாழ்ந்தார். இவர் திருக்குறளை எழுதினார். திருக்குறள் ஒரு சிறந்த நூல். இது இரண்டு அடிகளைக் கொண்டது. திருக்குறள் உண்மை பேச வேண்டும், உயிர்களிடத்தில் அன்பாய் இருக்க வேண்டும் என்று கூறுகிறது. இது பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. நாம் குறளைப் படிப்போம். நல்லவர்களாக வாழ்வோம்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ உழவுத் தொழிலிலும் கடற்றொழிலிலும் உள்ள துன்பநிலை பற்றிய உமது கருத்துகள்.

★ தாயின் தாலாட்டு என்ற பாடற்பகுதியை உமது உரைநடையில் எழுதுக.

★ உம்மால் மறக்க முடியாத ஒரு நிகழ்வு.

புள்ளிகள் 20